# சிலுவைப் பாதை

## இயேசுவின் வழி

## அன்பு வழி



என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து
தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு
என்னைப் பின்பற்றட்டும். (மத்16:24)

வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி
எவரும் தந்தையிடம் வருவதில்லை. (யோவா.14:6)

வழியும் உண்மையும் வாழ்வும் நானே என்று கூறிய
இயேசு காட்டிய வழி - தியாகம் நிறைந்த
அன்பு வழி - அன்புப் பாதை – சிலுவைப் பாதை

## சிலுவைப் பாதை




சிலுவை - அன்பின் அடையாளச் சின்னம்

கிறிஸ்து சிலுவை சுமந்து, பாடுகள் வேதனைகள்பட்டு,
சிலுவையில் அறையப்பட்டு, நமக்காகத் தம் உயிரைக்
கொடுத்து, கடவுள் மீதும், உலக மக்கள்மேலும் வைத்த
அன்பை வெளிப்படுத்தியதால், சிலுவை தியாகம்
நிறைந்த அன்பின் அடையாளச் சின்னமாயிற்று.

என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து
தம்சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.
(மத்16:24)

தன்னலம் துறந்து ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு
செலுத்தி, அடுத்தவர்மீதும் அன்பு கூர்ந்து, கிறிஸ்துவின்
அன்பு வழியில், தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு,
இறைஅரசை நோக்கிச் செய்யும், தியாகம் நிறைந்த
அன்புப் பயணம் - அதாவது தியாகம் நிறைந்த
அன்புப் பாதையே - சிலுவைப் பாதை.

Rt.Revd.Dr.Justin B Gnanapragasam
Bishop of Jaffna

Bishop's House,
P.O.Box No. 02
Jaffna - Sri Lanka.

September 28, 2019

IMPRIMATUR

திரு. சிங்கராஜ நவத்துரை அவர்கள் எழுதி, தொகுத்து வெளியிடும் சிலுவைப் பாதை - இயேசுவின் வழி அன்பு வழி என்ற இந்த கத்தோலிக்க பக்தி முயற்சி சார்ந்த நூலினை அச்சிடலாம் என இத்தால் உத்தரவு வழங்குகின்றேன்.

+ Gnanapragasam
Rt. Revd. Dr. Justin B Gnanapragasam
Bishop of Jaffna

Rt. Revd. Dr. Justin B Gnanapragasam
Bishop of Jaffna

Tel: +94(0) 21 222 2649(O)
+94(0) 21 222 8518(R)
Email: gnanamjb48@gmail.com

சிலுவைப் பாதை - இயேசுவின் வழி - அன்பு வழி
எழுதி, தொகுத்து வெளியிடுபவர்: சிங்கராஜா நவதுரை
Compiled and Edited by : Singarajah Navathurai

Email : navathurai@yahoo.com
Tel : +1 647 990 6282

# சிலுவைப் பாதை

## இயேசுவின் வழி – அன்பு வழி

வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. (யோவா.14:6)

வழியும் உண்மையும் வாழ்வும் நானே என்று கூறிய இயேசு காட்டிய வழி, தியாகம் நிறைந்த அன்பு வழி - அன்புப் பாதை - சிலுவைப் பாதை

தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது. (லூக்.14:27)

இயேசு தம் சீடரைப் பார்த்து, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.” (மத்16:24)

சிலுவை என்பது தியாகம் நிறைந்த அன்புச் சுமை. சிலுவை தியாகம் நிறைந்த அன்பின் அடையாளச் சின்னம்.

வழியும், உண்மையும், வாழ்வும் நானே, என்ற இயேசுவின் அன்பு வழியை, பதினைந்து நிலைகளில், சிந்தித்துத் தியானிக்க, மிகச்சிறந்த சிலுவைப்பாதையை திருஅவை எங்களுக்குத் தந்துள்ளது.

பதினைந்து நிலைகளையும் சுற்றிவந்து, யூதத்தலைவர்கள் முதல் பிலாத்துவரை, இயேசுவை எப்படியெல்லாம் சித்திரவதை செய்து கொன்றார்கள் என்று சொல்லி, மற்றவர்களின் தவறுகளை, பாவங்களைச் சுட்டிக்காட்டி, பேசுவதா சிலுவைப்பாதை? இல்லை.

நாம் செய்த தவறுகளையும், செய்யத் தவறிய கடமைகளையும். இறை வார்த்தைகள் ஊடாக, சிந்தித்துத் தியானிப்பதே உண்மையான சிலுவைப்பாதை.

வழியும் உண்மையும் வாழ்வும் நானே, என்ற இயேசுவின் அன்பு வழியை, பதினைந்து நிலைகளில் சிந்திப்போம், தியானிப்போம். எம் சிலுவையைத் சுமந்து இயேசுவின் பின்செல்வோம். இயேசுவின் சீடராய் வாழ்வோம்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும், உங்கள் அனைவரோடும் இருப்பதாக. (2கொரி13:13

## ஆயத்தச் செபம்

இயேசு சீடர்களுடன் கெத்சமனி என்னும் இடத்திற்கு வந்தார். அவர், “நான் அங்கே போய் இறைவனிடம் வேண்டும்வரை இங்கே அமர்ந்திருங்கள்” என்று அவர்களிடம் கூறி, பேதுருவையும் செபதேயுவின் மக்கள் இருவரையும் தம்முடன் கூட்டிச் சென்றார். அப்போது அவர் துயரமும் மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார். அவர், “எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது. நீங்கள் என்னோடு இங்கேயே தங்கி விழித்திருங்கள்” என்று அவர்களிடம் கூறினார். பிறகு அவர் சற்று அப்பால் சென்று முகங்குப்புற விழுந்து, “என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப் படியே நிகழட்டும்” என்று கூறி இறைவனிடம் வேண்டினார். அதன் பின்பு அவர் சீடர்களிடம் வந்து அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு பேதுருவிடம், “ஒரு மணி நேரம்கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? உங்கள் மனம் ஆர்வமுடையதுதான்; ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்” என்றார். (மத்.26:36-41)

இயேசு சீடரிடம் கூறிய அதேவார்த்தையை இன்று எங்களிடமும் கூறுகிறார்.

ஒரு மணி நேரம்கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? உங்கள் மனம் ஆர்வமுடையதுதான்; ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள். (மத்.26:40-41)

இயேசு கூறியதுபோல், ஒரு மணி நேரம் நம் தந்தையாகிய இறைவனிடம் வேண்டுவோம். எமக்காக சிலுவையில் அறையுண்ட இயேசுவை உற்றுநோக்குவோம்.

அன்புக்கு எதிராக நாம் செய்த தவறுகளையும், செய்யத் தவறிய கடமைகளையும், இறை வார்த்தைகள் ஊடாக, சிந்தித்துத் தியானிப்போம்.

### மன்றாட்டு:

கடவுளே! உமது பேரன்புகேற்ப எனக்கு இரங்கும்; உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும். (திபா51:1)

என் தீவினை முற்றிலும் நீங்கும் படி என்னைக் கழுவியருளும்; என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும்; (திபா51:2)

ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன்; என் பாவம் எப்போதும் என் மனக் கண்முன் நிற்கின்றது. (திபா51:3)

உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்; உம் பார்வையில் தீயது செய்தேன்; எனவே, உம் தீர்ப்பினால் உம் நீதியை வெளிப்படுத்தியுள்ளீர்; உம் தண்டனைத் தீர்ப்பில் நீர் மாசற்றவராய் விளங்குகின்றீர். (திபா51:4)

ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும்; நான் தூய்மையாவேன். என்னைக் கழுவியருளும்; உறைபனியிலும் வெண்மையாவேன். (திபா51:7)

கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்: உறுதிதரும் ஆவியை புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும். (திபா51:10)

ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச்செய்தருளும்; உம் வழிகளை எனக்குக் கற்பித்தருளும். (திபா.25:4)

ஆண்டவரே உமது உண்மைக்கேற்ப நான் நடக்குமாறு உமது வழியை எனக்குக் கற்பியும். (திபா.86:11)

உம் நியமங்களைக் குறித்து நான் சிந்திப்பேன்; உம் நெறிகளில் என் சிந்தையைச் செலுத்துவேன்; (திபா.119:15)

என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே! (திபா.119:105)

## கிறிஸ்துவின் பாடுகளில் 1ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம். அது ஏனென்றால் உமது சிலுவையினால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### பிலாத்துவின் முன் ஆண்டவராகிய இயேசு.
### இயேசுவிற்கு மரணத் தீர்ப்பு.

பிலாத்து மீண்டும் ஆளுநர் மாளிகைக்குள் சென்று இயேசுவைக் கூப்பிட்டு, அவரிடம், "நீ யூதரின் அரசனா?" என்று கேட்டான். (யோவா.18:33)

இயேசு மறுமொழியாக, "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல.

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்" என்றார். பிலாத்து அவரிடம், "உண்மையா? அது என்ன"? என்று கேட்டான். (யோவா.18:36-38)

இன்றும் பலர் கேட்கிறார்கள், உண்மையா? அது என்ன? - உண்மைபற்றி இயேசு வெளிப்படுத்திக் கூறிய வார்த்தைகள்.

வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. (யோவா.14:6)

உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர். (யோவா.4:23)

இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி, "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்; உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" என்றார். (யோவா.8:31-32)

உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். (யோவா.16:13)

இயேசு எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல என்றார். இவ்வுலகம், இவ்வுலக ஆட்சி அழிந்துபோகும். இந்த உலகம் பொய். இவ்வுலக வாழ்வு பொய். ஆனால் இயேசுவின் ஆட்சி நிலையானது. இறை அரசாகிய நிலை வாழ்வு உண்மை.

தூய யோவான் தன் முதல் திருமுகத்தில்.

பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம். இதனால் நாம் உண்மையைச் சார்ந்தவர்கள் என அறிந்து கொள்வோம்; (1யோவா.3:18-19)

இயேசுவின் சீடர்களில் ஒருவனாகிய யூதாஸ் உண்மையைச் சார்ந்தவனாக - உண்மையான சீடனாக இல்லாததால் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்.

இயேசுவிற்கு மரணத் தீர்ப்புக் கூறிய பிலாத்து, தான் வகித்த பதவிக்கு உண்மையானவனாக இல்லாததால், இயேசுவிற்கு மரணத் தீர்ப்பளித்தான்.

நம்மை நாமே கேட்போம் -- சிந்திப்போம்

நாம் உண்மையைச் சார்ந்தவரா?

நாம் கடவுளுக்கு உண்மையாய் இருக்கிறோமா?

இயேசுவின் உண்மையான சீடர்களாக இருக்கிறோமா?

நாம் கடவுளை உண்மையாய் வழிபடுகிறோமா?

நாம் செய்யும் வேலைக்கு, பதவிக்கு உண்மையாய் இருக்கிறோமா?

நாம் ஒருவருக்கு ஒருவர் உண்மையாய் இருக்கிறோமா?

மன்றாட்டு:

ஆண்டவரே உமது உண்மைக்கேற்ப நான் நடக்குமாறு உமது வழியை எனக்குக் கற்பியும். (திபா.86:11)

உமது உண்மை நெறியில் என்னை நடத்தி எனக்குக் கற்பித்தருளும்; (திபா.25:5)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும் - மரித்த விசுவாசிகள் உமது இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக.

# கிறிஸ்துவின் பாடுகளில் 2ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

## இயேசு சிலுவை சுமத்தப்படுகிறார்.

கடவுளின் திருவுளத்தை, மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற இயேசு சிலுவையை ஏற்றுக்கொண்டார்.

அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார். (எபி12:2)

ஆடுகளைப் போல நாம் அனைவரும் வழிதவறி அலைந்தோம்; நாம் எல்லாரும் நம் வழியே நடந்தோம்; ஆண்டவரோ நம் அனைவரின் தீச்செயல்களையும் அவர்மேல் சுமத்தினார். (ஏசா.53:6)

கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம். (1யோவா.3:16)

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம். அது ஏனென்றால் உமது சிலுவையினால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இயேசு வெறும்சிலுவை மரத்தினாலா, எங்களை மீட்டு இரட்சித்தார்? இல்லை. இயேசு தன் தியாகம் நிறைந்த அன்பினால் உலகத்தை மீட்டு இரட்சித்தார்.

சிலுவை தியாகம் நிறைந்த அன்பை - அன்புச் சுமையைக் குறிக்கின்றது.

கிறிஸ்து சிலுவை சுமந்து, பாடுகள் வேதனைகள்பட்டு, சிலுவையில் அறைபட்டு, நமக்காகத் தம் உயிரைக் கொடுத்து, கடவுள் மீதும் உலகமக்கள் மேலும் வைத்த அன்பை வெளிப்படுத்தியதால், சிலுவை தியாகம் நிறைந்த அன்பின் அடையாள சின்னமாயிற்று.

அன்பு என்றால் தியாகம் இருக்கவேண்டும். - தியாகமில்லாத அன்பு அன்பல்ல.

அன்பு சொல்லில் அல்ல செயலில் இருக்கவேண்டும்.

சிலுவை என்பது தியாகம் நிறைந்த அன்புச் சுமை.

இயேசு தம் சீடரைப் பார்த்து, "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" என்றார். (மத்.16:24)

இயேசு சிலுவை மரத்தையா சுமக்கச் சொன்னார்? - இல்லை - தம் தியாகம் நிறைந்த அன்புச் சுமைகளைச் சுமக்கச் சொன்னார். தம் தியாகம் நிறைந்த அன்புச் சுமைகளைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது என்கிறார்.

அதாவது இயேசு தன்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் பல துன்ப துயரங்கள், கவலைகள், அவமானம், வேதனை, நோவு, குடும்பப் பாரம் எனப் பல தியாகம் நிறைந்த அன்புச் சுமைகளை ஏற்றுச் சுமந்துகொண்டு, தன்னைப் பின்பற்றட்டும் என்கிறார்.

மன்றாட்டு:

ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்; உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். (திபா.85:7)

ஆண்டவரின் பேரன்பைப்பற்றி நான் என்றும் பாடுவேன்; நீர் உண்மையுள்ளவர் எனத் தலைமுறைதோறும் என் நாவால் அறிவிப்பேன். (திபா.89:1)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.-

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும் - மரித்த விசுவாசிகள் உமது இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக.

# கிறிஸ்துவின் பாடுகளில் 3ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம். அது ஏனென்றால் உமது தியாகம் நிறைந்த அன்பினால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

## இயேசு முதலாம் முறை வீழ்த்தபடுகிடுகிறார்.

இயேசுவின் வார்த்தைக்குச் செவிகொடுக்க மறுத்து, இயேசுவின் வார்த்தையை புறக்கணித்து, தள்ளிவிடும்போது - இயேசுவையே தள்ளி வீழ்த்துகிறோம். தூய பவுல் கூறுவது.

கடவுளின் வார்த்தைக்குச் செவி சாய்க்க மறுத்து விடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். இவ்வுலகில் அவரது எச்சரிக்கைக்குச் செவிசாய்க்க மறுத்தவர்கள் தண்டனைக்குத் தப்பவில்லை. அவ்வாறெனில் விண்ணுலகிலிருந்து பேசுபவரைப் புறக்கணித்தால், நாம் எவ்வாறு தப்பித்துக் கொள்ள முடியும்? (எபி.12:25)

எனவே இக்கட்டளைகளைப் புறக்கணிப்போர் மனிதரை அல்ல தம்முடைய தூய ஆவியை உங்களுக்கு அளிக்கும் கடவுளையே புறக்கணிக்கின்றனர். (1தெச.4:8)

என் வார்த்தைக்குச் செவிசாய்க்க மறுப்பவர்கள், என்னையே புறக்கணிக்கின்றனர் என்கிறார் இயேசு.

உங்களுக்குச் செவிசாய்ப்பவர் எனக்குச் செவிசாய்க்கிறார். உங்களைப் புறக்கணிப்பவர் என்னைப் புறக்கணிக்கிறார். என்னைப் புறக்கணிப்பவர் என்னை அனுப்பினவரையே புறக்கணிக்கிறார். (லூக்.10:16)

உண்மையை எடுத்துரைப்பதே என்பணி. இதற்காகவே நான் பிறந்தேன்: இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர். (யோவா.18:37)

என் ஆடுகள் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப் பின் தொடர்கின்றன. (யோவா.10:27)

வழியோரம் விழுந்த விதைகள், அவ்வார்த்தைகளைக் கேட்பவர்களுள் சிலரைக் குறிக்கும். அவர்கள் நம்பி மீட்புப் பெறாதவாறு அலகை வந்து அவ்வார்த்தையை அவர்கள் உள்ளத்திலிருந்து எடுத்துவிடுகிறது. (லூக்.8:12)

நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும். நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது. (யோவா15:7-8)

இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களென்றால், கிளர்ச்சியின்போது இருந்ததுபோல, உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள். (எபி.3:15)

அவர் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில்தான் கடவுள் அன்பு அடங்கியுள்ளது. அவர் கட்டளைகள் நமக்குச் சுமையாய் இருப்பதில்லை. (1யோவா.5:3)

கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு; அவரது குரலுக்குச் செவிகொடு; அவரையே பற்றிக் கொள். ஏனெனில், அவரே உனது வாழ்வு; அவரே உன் நீடிய வாழ்வு. (இச.30:20)

மன்றாட்டு:

ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச்செய்தருளும்; உம் வழிகளை எனக்குக் கற்பித்தருளும். (திபா.25:4)

ஆண்டவர் நல்லவர்: நேர்மையுள்ளவர்: ஆகையால், அவர் பாவிகளுக்கு நல்வழியைக் கற்பிக்கின்றார். (திபா.25:8)

என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே! (திபா.119:105)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.

எங்கள் பேரில் தயவாயிரும் - - - -

# கிறிஸ்துவின் பாடுகளில் 4ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

இயேசு சிலுவை சுமந்து சென்றபோது -
தாய் மரியாவும் தம் சிலுவையை சுமந்து சென்றார்.

இயேசு சிலுவையில் உயிர்விடும்போது, சிலுவையடியில் நின்ற தாய் மரியா, இயேசு சிலுவை சுமந்து சென்றபோதும் அவரோடு சேர்ந்து சென்றார்.

சிலுவை என்பது தியாகம் நிறைந்த அன்புச் சுமை. தாய் மரியா கடவுள் மீதும், உலகமக்கள் மீதுவைத்த அன்பிற்காக, கடவுளின் சித்தத்தை, திருவுளத்தை, மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற, சிலுவையை ஏற்றுக்கொண்டார். சிலுவையில் அறையப்பட்டார். தூய பவுல் தானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன் என்கிறார்.

நானோ நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன். அதன் வழியாகவே, என்னைப் பொறுத்தவரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். (கலா.6:14)

இயேசு தம் சீடரைப் பார்த்து, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” என்றார். (மத்.16:24)

கடவுளின் சித்தத்தை, திருவுளத்தை, மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற, தாய் மரியாய் பல சிலுவைகளை ஏற்றுச் சுமந்தார்.

பாலன் இயேசுவைப் பெற்றெடுக்க இடமின்றி, உதவியின்றி பட்டவேதனை - ஒரு சிலுவை.

ஏரோது பாலன் இயேசுவை கொல்லத் தேடியபோது பட்டவேதனை - ஒரு சிலுவை.

ஏரோது இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றபோது பட்டவேதனை - ஒரு சிலுவை.

சிமியோன் கூறிய, “உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்” என்ற வார்த்தையை கேட்ட தாய் மரியாய் பட்டவேதனை - ஒரு சிலுவை.

இயேசுவைக் காணாது மூன்று நாள் தேடி, அலைந்தபோது பட்ட வேதனை - ஒரு சிலுவை.

இயேசு தான் பலவாறு துன்பப்படவும், கொலை செய்யப்படுவதையும் முன் அறிவித்துக் கூறியபோது, அதைக்கேட்ட தாய் மரியாய் பட்டவேதனை - ஒரு சிலுவை.

இயேசு பிடிபட்டது முதல், சிலுவையில் உயிர் விடும்வரை, இயேசுவின் அத்தனை பாடுகள், வேதனைகளையும் அருகில் இருந்து பார்த்த தாய் மரியாய் அனுபவித்த சொல்லமுடியாத வேதனை, சோதனைகள், அத்தனையும் எத்தனை சிலுவை. இத்தனை சிலுவைகளும், கடவுளின் சித்தத்தை, திருவுளத்தை, மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற, தாய் மரியாய் ஏற்றுச் சுமந்த சிலுவைகள்.

தாய்மரியாவைப்போல் நாங்களும் இறை சித்தத்தை அறிந்து, கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற, எல்லா சிலுவைகளையும் அன்போடு சுமக்கும் வரம் வேண்டிச் செபிப்போம்.

மன்றாட்டு:

என் கடவுளே! உமது திருவுளம் நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்; உமது திருச்சட்டம் என் உள்ளத்தில் இருக்கின்றது. (திபா.40:8)

உம் திருவுளத்தை நிறைவேற்ற எனக்குக் கற்பித்தருளும்; ஏனெனில், நீரே என் கடவுள்; உமது நலமிகு ஆவி என்னைச் செம்மையான வழியில் நடத்துவதாக! (திபா.143:10)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.

எங்கள் பேரில் தயவாயிரும் - - - -

# கிறிஸ்துவின் பாடுகளில் 5ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

## சீமோன் என்பவர் இயேசுவோடு சேர்ந்து தம் சிலுவையை சுமந்து சென்றார்.

சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்து கொண்டிருந்தார். படைவீரர்கள் இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள். (மாற்.15:21)

இயேசு தம் சீடரைப் பார்த்து, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” என்றார். (மத்.16:24)

சிலுவை என்பது தியாகம் நிறைந்த அன்புச் சுமை. நம்முன் பலவிதமான சிலுவைகள். அதாவது பலவிதமான அன்புச் சுமைகள்

தன் குடும்பத்தின் மீது வைத்த அன்பிற்காக சுமக்கும் குடும்பப் பாரம் சிலவேளைகளில் ஒரு சிலுவை. மேலும் கடமை, சட்டம் என்ற பெயரில் மற்றவர்களின் வற்புறுத்தலால், கட்டாயத்தின் பெயரில் சுமத்தப்படும் சுமைகள் ஒரு சிலுவை.

தன் குடும்பத்திற்காக வயலில் வேலை செய்து, மிகுந்த களைப்போடு வீடு திரும்பிக்கொண்டிருந்த சீமோனை, படைவீரர்கள் பிடித்து, இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி, அவரைக் கட்டாயப்படுத்தினார்கள்.

கட்டாயத்தின் பேரில் சுமத்தப்பட்ட சிலுவையை, சீமோன் ஏற்று இயேசுவோடு சுமந்து சென்றார். தம் குடும்பச்சுமையோடு சேர்த்துச்சுமந்தார். அச்சிலுவையை இயேசுவோடு சேர்ந்து சுமந்தபொழுது, அச்சுமை அன்புச் சுமையாக - சுமப்பதற்கு சுகமான சுமையாக, இலகுவாக இருந்தது.

எந்தச் சுமையையும் அன்போடு சுமந்தால், அச்சுமை சுகமான சுமையாக இருக்கும்.

நம் வாழ்விலும் பல சுமைகள் கஸ்டங்கள், கவலைகள், நோவு, வருத்தங்கள், குடும்பப் பாரம் என எல்லா சிலுவைகளையும் இயேசுவின் சிலுவையோடு சேர்ந்து சுமந்தால், அச்சிலுவைகள் எல்லாம் அன்புச் சுமையாக - சுகமான சுமையாக - சுமப்பதற்கு மிகஎளிதாய் இருக்கும் என்கிறார் இயேசு.

“பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.” (மத்.11:28)

“நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம் என் நுகம் அழுத்தாது என் சுமை எளிதாயுள்ளது என்றார்.” (மத்.11:29-30)

தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது. (லூக்.14:27)

இயேசுவின் வார்த்தையின்படியே, எம்மீது சுமத்தப்படும் எல்லா சிலுவைகளையும், இயேசுவின் சிலுவையோடு சேர்ந்து சுமப்போம். இயேசுவின் சீடராய் வாழ்வோம்.

மன்றாட்டு:

ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை. (திபா.23:1)

ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு; யாருக்கு நான் அஞ்சவேண்டும்? (திபா.27:1)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.

எங்கள் பேரில் தயவாயிரும் - - -

# கிறிஸ்துவின் பாடுகளில் 6ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

## வெரோணிக்காள் இயேசுவின் துயரம் நிறைந்த முகத்தை துணியால் துடைத்தார்.

இயேசு தம் சீடரைப் பார்த்து, என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். (மத்16:24)

வெரோணிக்காள் என்பவர் தன்னலம் துறந்து, தாமாகவே முன்வந்து, துன்பப்படுவோரின் துயர் துடைக்க, மற்றவர்களின் சிலுவையை, தம் சிலுவையாக ஏற்றுச் சுமந்தார்.

தன்னலம் துறந்து, ஆதரவற்ற, துன்பப்படுவோரின் துயர் துடைத்து, அன்பு செய்ய தடையாக இருக்கும் சட்டம், கலாச்சாரம், சம்பிரதாயங்கள் அனைத்தையும் மீறி, மற்றவர்களின் சுமைகள், பாரத்தை தம் சிலுவையாக ஏற்று சுமப்பது - ஒரு சிலுவை

வெரோனிக்கா தன் முகத்தை மூடியிருந்த முக்காட்டை களட்டி, அத்துணியால் இயேசுவின் முகத்தை துடைத்தார். யூத சட்டத்தை மீறி, முக்காட்டை களட்டி, அத்துணியால் இயேசுவின் முகத்தை துடைத்தார். அன்பு செய்ய - துயர் துடைக்கத் தடையாக இருக்கும் சட்டம், கலாச்சாரம், சமபிரதாயங்கள் அனைத்தையும் மீறி - அவள் காட்டிய அன்புக்காக, இயேசு இரத்தம் தோய்ந்த தன் முகத்தை அத் துணியில் பதித்துக்கொடுத்தார்.

ஏன் இயேசு இரத்தம் தோய்ந்த தன் முகத்தை அத் துணியில் பதித்துக்கொடுத்தார்?

உலகத்தின் பாவத்திற்காக தன்னையே சிலுவையில் பலியாக்கிய இயேசு, தான் பட்ட பாடுகள், வேதனையின் கொடூரத்தை மக்கள் அடிக்கடி பார்த்து, அதில் தங்கள் பாவத்தின் கொடூரத்தை பார்க்கவேண்டும். அவருடைய துன்பங்களில் நாம் பங்கு பெற வேண்டும், என்பதை வெளிப்படுத்தவே, இயேசு, இரத்தம் தோய்ந்த தன் முகத்தை அத் துணியில் பதித்துக்கொடுத்தார்.

கிறிஸ்துவின் துன்பங்களில் பங்கு பெறுவது எப்படி?

துன்பப்படுவோரின் துன்ப துயரங்களில் பங்குகொள்ளும்போது, கிறிஸ்துவின் துன்பங்களில் நாம் பங்கு பெறுகிறோம்.

மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள், என்கிறார் இயேசு.

நான் பசியாய் இருந்தேன் நீங்கள் உணவு கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள். அன்னியனாக இருந்தேன் என்னை ஏற்றுக் கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன் நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள், நோயுற்றிருந்தேன் என்னைக் கவனித்துக் கொண்டீர்கள், சிறையில் இருந்தேன் என்னைத் தேடி வந்தீர்கள் என்பார். அதற்கு நேர்மையாளர்கள் ஆண்டவரே எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம் அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தை தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத்தேடி வந்தோம்? என்று கேட்பார்கள். அதற்கு அரசர் “மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்” எனப் பதிலளிப்பார். (மத்.25:35-40)

மன்றாட்டு:

எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறுபெற்றவர்; துன்ப நாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார். (திபா.41:1)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

எங்கள் பேரில் தயவாயிரும் - - - -

## கிறிஸ்துவின் பாடுகளில் 7ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம். அது ஏனென்றால் உமது தியாகம் நிறைந்த அன்பினால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### இயேசு இரண்டாம் முறை வீழ்த்தப்படுகிடுகிறார்.

கடவுளின் வார்த்தையை, கட்டளையை, போதனையை கேட்டு, படித்து, அறிந்தவர்கள், கடவுளை வாயினால் போற்றிப் புகழ்வார்கள். ஆனால் அவ்வார்த்தையின்படி நடக்காமல், கடைப்பிடிக்காமல் இறைவார்த்தையை புறக்கணிக்கும்போது - இயேசுவையே புறக்கணித்துத் தள்ளி வீழ்த்துகிறார்கள்.

பரிசேயரும் மறைநூல் அறிஞரும் அவரை நோக்கி உம்சீடர் மூதாதையர் மரபுப்படி நடவாமல் தீட்டான கைகளால் உணவு அருந்துவதேன் என்று கேட்டனர் அதற்கு அவர், வெளிவேடக்காரர்களாகிய உங்களைப்பற்றி எசாயா பொருத்தமாக இறைவாக்கு உரைத்திருக்கிறார். “இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர்; இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலைவில் இருக்கிறது. மனிதக் கட்டளைகளைக் கோட்பாடுகளாகக் கற்பிக்கின்றனர். இவர்கள் என்னை வழிபடுவது வீண்” என்று அவர் எழுதியுள்ளார். நீங்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு மனித மரபைப் பின்பற்றி வருகிறவர்கள் என்று அவர்களிடம் கூறினார். மேலும் அவர், “உங்கள் மரபை நிலைநாட்டக் கடவுளின் கட்டளைகளை வெகு திறமையாகப் புறக்கணித்து விட்டீர்கள்”. (மாற்.7:5-9)

எனவே இக்கட்டளைகளைப் புறக்கணிப்போர், மனிதரை அல்ல, தம்முடைய தூய ஆவியை உங்களுக்கும் அளிக்கும் கடவுளையே புறக்கணிக்கின்றனர். (1தெச.4:8)

திருச்சட்டத்தைக் கேட்பதால் மட்டும் யாரும் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவதில்லை; அதனைக் கடைப்பிடிப்பவர்களே அவருக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள். (உரோ2:13)

இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். (யாக்.1:22)

கடவுளாகிய ஆண்டவர் எங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றார்?

உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி, அவர்தம் அனைத்து வழிகளிலும் நடந்து, அவர் மீது அன்புகூர்ந்து, உங்கள் முழு இதயத்தோடும் உங்கள் முழு உள்ளத்தோடும் அவருக்குப் பணிபுரிந்து, உங்களுக்கு எல்லாம் நலமாகும் பொருட்டு நான் இன்று கற்பிக்கின்ற அவர்தம் கட்டளைகளையும் நியமங்களையும் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்பதன்றி, அவர் உங்களிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்கின்றார்? (இச.10:12-13)

மன்றாட்டு:

ஆண்டவரே! நீர் உம் நியமங்களைத் தந்தீர்; அவற்றை நாங்கள் முழுமையாய்க் கடைப்பிடிக்க வேண்டும் என்றீர். (திபா.119:4)

உம் விதிமுறைகளை நான் கடைப்பிடிப்பேன்; என்னை ஒருபோதும் கைவிட்டுவிடாதேயும். (திபா.119:8)

உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன். (திபா.119:11)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.

எங்கள் பேரில் தயவாயிரும் - - - -

# கிறிஸ்துவின் பாடுகளில் 8ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம். அது ஏனென்றால் உமது தியாகம் நிறைந்த அன்பினால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

## இயேசு எருசலேம் நகர மக்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.

பெருந்திரளான மக்களும், அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும், அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்". (லூக்23:27-28)

தனக்காக அழுது, புலம்பி, ஒப்பாரி வைத்த எருசலேம் நகர் பெண்களைப்பார்த்து, எனக்காக அழுவதைவிட்டு, இத்தனைபாடுகள் மரணத்திற்குக் காரணமான, உங்கள் பாவங்களுக்காக அழுங்கள். செய்த தவறுகள், செய்யத் தவறிய கடமைகளையும் நினைத்து, அதற்காக அழுங்கள். உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் - என்கிறார் இயேசு.

கடவுள் பிள்ளைகளை பெற்றோரின் கையில் ஒப்படைத்துள்ளார். கடவுளுக்கேற்ற பிள்ளைகளாக வளர்க்க வேண்டிய முழுப்பொறுப்பும், கடமையும் பெற்றோருடையது. பெற்றோர் மட்டுமல்ல, யாராயிருந்தாலும் சிறுபிள்ளைகள் மட்டில் எவ்வளவு அக்கறையோடு இருக்கவேண்டும் என்று இயேசுவே கூறுகிறார்.

இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருதவேண்டாம்: கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்.18:10)

என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது. ஐயோ! பாவத்தில் விழச்செய்யும் உலகுக்குக் கேடு! பாவத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஐயோ! அதற்குக் காரணமாய் இருப்போருக்குக் கேடு! (மத்.18:6-7)

இச்சிறியோருள் ஒருவர்கூட நெறி தவறிப் போகக்கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் திருவுளம். (மத்.18:14)

சிறு பிள்ளைகளை இயேசு தொட வேண்டுமென்று அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டுவந்தனர். சீடரோ அவர்களை அதட்டினர். இயேசு இதைக் கண்டு, கோபம் கொண்டு, "சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது." (மாற்.10:13-15)

மன்றாட்டு:

ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்! அவர்தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள். (திபா.105:1)

அவருக்குப் பாடல் பாடுங்கள்; அவரைப் புகழ்ந்தேத்துங்கள்! அவர்தம் வியத்தகு செயல்கள் அனைத்தையும் எடுத்துரையுங்கள்! (திபா.105:2)

நாங்கள் கேட்டவை, நாங்கள் அறிந்தவை, எம் மூதாதையர் எமக்கு விரித்துரைத்தவை - இவற்றை உரைப்போம். (திபா.78:3)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும் - மரித்த விசுவாசிகள் உமது இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக.

# கிறிஸ்துவின் பாடுகளில் 9ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

## இயேசு மூன்றாம் முறை வீழ்த்தபடுகிடுகிறார்

பெயருக்குக் கிறஸ்தவர்களாக இருப்பவர்கள் புதுமை செய்யும் இயேசு மட்டும் போதும் - சிலுவையில் அறையுண்ட, துன்புற்ற கிறிஸ்து வேண்டாம் என்று தள்ளிவிடும்போது, இயேசுவையே புறக்கணித்துத் தள்ளி வீழ்த்துகிறார்கள்.

தப்பான போதனைகளால், கிறிஸ்துவின் திருச்சபையைவிட்டு விலகிச்செல்லும்போது - இயேசுவையே புறக்கணித்துத் தள்ளி வீழ்த்துகிறார்கள்.

சிலுவையில் அறையுண்ட, துன்புற்ற கிறிஸ்துவின் பாடுகளை, அவர்பட்ட அவமானங்களை ஏற்க சிந்திக்க மறுப்பவர்கள், இயேசுவையே புறக்கணிக்கிறார்கள், அவரை மதிக்காது இழிவுபடுத்துகிறார்கள்.

அவர் இகழப்பட்டார், மனிதரால் புறக்கணிக்கப்பட்டார், வேதனையுற்ற மனிதராய் இருந்தார், நோயுற்று நலிந்தார் காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார். அவர் இழிவுபடுத்தப்பட்டார், அவரை நாம் மதிக்கவில்லை. (எசா53:3)

இன்று சிலர் கிறிஸ்துவின் துன்பங்களில் பங்கு பெற மறுக்கிறார்கள். புதமைகளையும், அடையாளங்களையும் மட்டுமே எதிர்பார்க்கிறார்கள்.

கிறிஸ்துவின் துன்பங்களில் நாம் பங்கு பெற வேண்டும் என்கிறார் தூய பவுல்

“பவுலாகிய நான் இந்நற்செய்தியை அறிவிக்கும் திருத்தொண்டன் ஆனேன். இப்பொழுது, உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். அவர் மேலும் படவேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவு செய்கிறேன்.” (கொலோ.1:23-24)

நாம் பிள்ளைகளாயின், உரிமைப் பேறு உடையவர்களாய் இருக்கிறோம். ஆம், நாம் கடவுளிடமிருந்து உரிமைப் பேறு பெறுபவர்கள். கிறிஸ்துவின் பங்காளிகள். அவருடைய துன்பங்களில் நாம் பங்கு பெற வேண்டும்: அப்போதுதான் அவரோடு மாட்சியிலும் பங்கு பெறுவோம். (உரோ.8:17)

இயேசு திருவாய் மலர்ந்து கற்பித்தவை;

துயருறுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். (மத்.5:4)

நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். (மத்.5:10-12)

மன்றாட்டு:

ஆண்டவரே! என்னைக் கைவிடாதேயும்; என் கடவுளே! என்னைவிட்டு அகன்றுவிடாதேயும். (திபா.38:21)

உம் வாக்கு என் துன்பத்தில் எனக்கு ஆறுதல் அளிக்கின்றது; ஏனெனில், அது எனக்கு வாழ்வளிக்கின்றது. (திபா.119:50)

துன்பமும் கவலையும் என்னைப் பற்றிக்கொண்டன; எனினும் உம் கட்டளைகள் என்னை மகிழ்விக்கின்றன. (திபா.119:143)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.

எங்கள் பேரில் தயவாயிரும் - - - -

# கிறிஸ்துவின் பாடுகளில் 10ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம். அது ஏனென்றால் உமது தியாகம் நிறைந்த அன்பினால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

## இயேசுவின் ஆடைகளை களைந்தார்கள்.

இயேசுவின் ஆடைகளை களைந்து, தலையில் முள்முடி வைத்து, அவர்மேல் துப்பி, ஏளனம் செய்து அவமானப்படுத்தினார்கள்.

ஆளுநரின் படைவீரர் இயேசுவை ஆளுநன் மாளிகைக்குக் கூட்டிச் சென்று அங்கிருந்த படைப்பிரிவினர் அனைவரையும் அவர்முன் ஒன்று கூட்டினர். அவருடைய ஆடைகளை உரிந்து கருஞ்சிவப்பு நிறமுள்ள தளர் அங்கியை அவருக்கு அணிவித்தனர். அவர்கள் ஒரு முள்முடி பின்னி, அவரது தலையின்மேல் வைத்து, அவருடைய வலக்கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர்முன் முழந்தாள்படியிட்டு, யூதரின் அரசரே வாழ்க என்று சொல்லி ஏளனம் செய்தனர். அவர்மேல் துப்பி, அக்கோலை எடுத்து அவருடைய தலையில் அடித்தனர். (மத்.27:27-30)

இயேசுவுக்கு அன்று நடந்தது இன்றும் நடந்துகொண்டேயிருக்கிறது.

கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் வாழ்பவர்கள் செய்யும் தவறுகளால், கிறிஸ்துவின் பெயருக்கே அவமானம் - ஏளனம்.

பொல்லார் தம் தீய நாட்டங்களில் தற்பெருமை கொள்கின்றனர்; பேராசையுடையோர் ஆண்டவரைப் பழித்துப் புறக்கணிக்கின்றனர். (திபா.10:3)

நாள், சகுனம், சாஸ்திரம் பார்க்கும்போது கடவுளையே இழிவுபடுத்துகிறார்கள்.

இவர்கள் இறைமகனைத் தாங்களே சிலுவையில் அறைந்து, வெளிப்படையாக இழிவுபடுத்துகிறவர்கள் ஆவர். (எபி.6:6)

மானிடரே! எவ்வளவு காலம் எனக்குரிய மாட்சிக்கு இழுக்கைக் கொண்டு வருவீர்கள்? எவ்வளவு காலம் வெறுமையை விரும்பிப் பொய்யானதை நாடிச் செல்வீர்கள்? (திபா.4:2)

கிறிஸ்துவின் பெயருக்கு புகழையும், மகிமையையும் பெற்றுக் கொடுக்க வேண்டிய நாமே, அவருக்கு அவமானத்தை ஏற்படுத்துகின்றோம். கடவுளை இழிவுபடுத்துகின்றோம்.

கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைத் தாங்கியவர்களே திருச்சட்டத்தை மீறிக் கடவுளை இழிவுபடுத்துகிறார்கள். அவர்களால் கடவுளின் பெயர் பிற இனத்தாரிடையே இகழப்படுகின்றது, என்கிறார் தூயபவுல்

பிறருக்குக் கற்றுக்கொடுக்கும் நீங்களே கற்றுக் கொள்ளவில்லையே! திருடாதே எனப் பறைசாற்றுகிறீர்கள்; நீங்களே திருடுவதில்லையா? விபசாரம் செய்யாதே எனச் சொல்கிறீர்கள்; நீங்களே விபசாரம் செய்வதில்லையா? தெய்வச் சிலைகளைத் தீட்டாகக் கருதுகிறீர்கள்; நீங்களே அவற்றின் கோவில்களைக் கொள்ளையிடுவதில்லையா? திருச்சட்டத்தைப் பற்றிப் பெருமைப்படுகிறீர்கள்; நீங்களே அச்சட்டத்தை மீறிக் கடவுளை இழிவுபடுத்துவதில்லையா? ஆம், மறைநூலில் எழுதியுள்ளவாறு உங்களால் கடவுளின் பெயர் பிற இனத்தாரிடையே இகழப்படுகின்றது. (உரோ2:21-24)

என் பெயரால் பொய்யாணையிட்டு உங்கள் கடவுளின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தாமலும் இருங்கள் நான் ஆண்டவர். (லேவி 19:12)

மன்றாட்டு:

விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக,

எங்கள் மீட்பராகிய கடவுளே! உமது பெயரின் மாட்சியை முன்னிட்டு எங்களுக்கு உதவி செய்தருளும்; உமது பெயரை முன்னிட்டு எங்களை விடுவித்தருளும்; எங்கள் பாவங்களை மன்னித்தருளும். (திபா.79:9)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.

எங்கள் பேரில் தயவாயிரும் - - - - மரித்த விசுவாசிகள்

# கிறிஸ்துவின் பாடுகளில் 11ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

## இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள்.

இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு ‘மண்டை ஓட்டு இடம்” என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில் கொல்கொதா என்பது பெயர். அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள்; (யோவா.19:17-18)

சிலுவையின்மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். அவர்தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள். (1பேது.2:24)

தம் உயிரைக் கொடுத்து, நம்மீது கொண்டுள்ள தம் அன்பை வெளிப்படுத்திய இயேசு, இத்தனை பாடுகள் வேதனைகளுக்கும் மத்தியில், உயிர் விடமுன், தன்னைச் சிலுவையில் அறைந்து, துன்புறுத்தியோரை மன்னித்து, அவர்களுக்காக மன்றாடினார்.

அப்போது இயேசு, “தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை” என்று சொன்னார். (லூக்.23:34)

அயலவரை அன்பு செய்ய இருக்கவேண்டிய முதற் பண்பு மன்னிப்பு. எங்கு அன்பு இருக்கிறதோ, அங்கே மன்னிப்பு இருக்கும். எங்கு மன்னிப்பு இருக்கிறதோ, அங்கே அமைதி இருக்கும்.

மன்னியுங்கள்; மன்னிப்புப் பெறுவீர்கள் என்கிறார் இயேசு.

மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார். (மத்.6:14-15)

”பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள்; அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள்; அப்போதுதான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள்; மன்னிப்புப் பெறுவீர்கள். (லூக்.6:37)

ஒருவருக்கொருவர் நன்மைசெய்து பரிவு காட்டுங்கள்: கடவுள் உங்களைக் கிறிஸ்து வழியாக மன்னித்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள். (எபே.4:32)

மன்றாட்டு:

கடவுளே! உமது பேரன்புகேற்ப எனக்கு இரங்கும்; உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும். (திபா.51:1)

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

நித்திய பிதாவே! எங்கள் ஆண்டவரும் உமது நேசமகனுமான இயேசுகிறிஸ்துவின் உடலையும், உதிரத்தையும், ஆன்மாவையும், தெய்வீகத்தையும் எங்கள் பாவங்களுக்கும், அகில உலகின் பாவங்களுக்கும் பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.-

எங்கள் பேரில் தயவாயிரும் - - - - மரித்த விசுவாசிகள் உமது இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக.

# கிறிஸ்துவின் பாடுகளில் 12ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

## இயேசு உயிர் துறந்தார்.

“தந்தையே, உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்” என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார். (லூக்.23:46)

கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம். (1யோவா.3:16)

இயேசு, தன்னைத் துன்புறுத்துவோருக்காக “தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை” என்ற மன்றாட்டு, குற்றவாளிகளுள் ஒருவனை மனமாற்றமடையச் செய்தது.

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், “நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று” என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு, ‘கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!” என்று பதிலுரைத்தான். பின்பு அவன், “இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்” என்றான். அதற்கு இயேசு அவனிடம், ”நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்” என்றார். (லூக்.23:39-43)

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், இயேசுவை பழித்துரைத்தான்.

ஆனால் மற்றவன் “நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!” என்று பதில் கூறினான்.

இக்குற்றவாளியின் மனமாற்றத்திற்குக் காரணம் என்ன?

சிலுவையில் மரண வேதனைப்பட்டுக்கொண்டிருந்த இயேசுவை உற்றுநோக்கினான். தனக்குள் சில கேள்விகளைக் கேட்டான்.

இயேசுவிற்கு ஏன் இந்தப்பாடுகள்? ஏன் இந்தச் சிலுவை மரணம்?

ஏன் இயேசு, தன்னைத் துன்புறுத்துவோருக்காக தந்தையே, இவர்களை மன்னியும், என்று மன்றாடினார்?

ஏன்? என்ற கேள்வியை தனக்குள் கேட்டவனுக்கு கிடைத்த பதில்.

பாவிகளாகிய எங்களை மீட்டு, இறை அரசாகிய நிலை வாழ்வில் எங்களை வாழவைக்கவே, இயேசுவிற்கு இந்தப்பாடுகள், இந்தச் சிலுவை மரணம் என்பதை அறிந்தான்.

தன்னைச் சிலுவையில் அறைந்து துன்புறுத்துவோரை மன்னித்த இயேசு - பாவியாகிய தன்னையும் மன்னிப்பார் என்ற நம்பிக்கை கொண்டவனாய்.

“இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்” என்றான். அதற்கு இயேசு அவனிடம், “நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்” என்றார். (லூக்.23:42-43)

மன்றாட்டு:

நித்திய பிதாவே! எங்கள் ஆண்டவரும் உமது நேசமகனுமான இயேசுகிறிஸ்துவின் உடலையும், உதிரத்தையும், ஆன்மாவையும், தெய்வீகத்தையும் எங்கள் பாவங்களுக்கும், அகில உலகின் பாவங்களுக்கும் பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே, தண்ணீரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.-

எங்கள் பேரில் தயவாயிரும் - - - - மரித்த விசுவாசிகள்

## கிறிஸ்துவின் பாடுகளில் 13ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

### இயேசுவின் உடல் தாய் மரியாயின் மடியில்.

கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபை தாய் மரியாயின் மடியில்

கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். (கொலோ.1:24)

கடவுள் அனைவரையும் கிறிஸ்துவுக்கு அடிபணியச்செய்து, அனைத்துக்கும் மேலாக, அவரைத் திருச்சபைக்குத் தலையாகத் தந்தருளினார். திருச்சபையே அவரது உடல். எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற அவரால் அது நிறைவு பெறுகின்றது.(எபே.1:22-23)

இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், "அம்மா இவரே உம் மகன்" என்றார். பின்னர் தம் சீடரிடம், "இவரே உம் தாய்" என்றார். (யோவா19:26-27)

தந்தையாகிய கடவுள் தன் மகன் இயேசுவை தாய் மரியாயிடம் ஒப்படைததார். இயேசு தன் சீடர்களை தாய் மரியாயிடம் ஒப்படைத்தார்.

இயேசு தன் தாய் மரியாவை எங்களுக்குத் தாயாக தந்துள்ளார். கடவுளின் தாய் மரியாவை அம்மா என்றழைக்கும் உரிமையைத்தந்த இயேசு, தன் தந்தையாகிய கடவுளையும் அப்பா தந்தை என்றழைக்கும் உரிமையையும், தாய் மரியாய் வழியாகவே எங்களுக்குத் தந்துள்ளார்.

தாய் மரியா - கடவுளின் தாய். கடவுளின் மகனைக் கருத்தாங்கிப் பெற்றெடுத்ததன் மூலம், தாய்மரியாயின் பிள்ளைகளாகிய நாங்கள், கடவுளின் பிள்ளைகளாகவும், அப்பா தந்தையே எனக் கூப்பிடும் உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கிறோம். இது கடவுளின் செயலே. என்கிறார் தூய பவுல்.

காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார். நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தன் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி அப்பா தந்தையே எனக் கூப்பிடுகிறது. ஆகையால் இனி நீங்கள் அடிமைகளல்ல பிள்ளைகள்தாம். பிள்ளைகளாகவும் உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கிறீர்கள். இது கடவுளின் செயலே. (கலா.4:4-7)

விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, என்று அன்போடு அழைத்து செபிக்கும் செபத்தை, இயேசு எங்களுக்குத் தந்துள்ளார்.

எங்களை இறைஅரசில் வாழவைக்கவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். அதுவே தந்தையாகிய கடவுளின் திருவுளம்.

இந்தப்பாடுகள், சிலுவை மரணத்தினூடாக, இயேசு பெற்றுத்தந்த இறை அரசு வரவேண்டும். கடவுளின் திருவுளம் நிறைவேறவேண்டும் என்று நாமும் விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையை நோக்கி மன்றாடுவோம்.

விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே, உமதுபெயர்
தூயது எனப் போற்றப் பெறுக, உமது ஆட்சி வருக.
உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல
மண்ணுலகிலும் நிறைவேறுக.

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்.
எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது
போல, எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச்
சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை
விடுவித்தருளும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.-

எங்கள் பேரில் தயவாயிரும் - - - -

# கிறிஸ்துவின் பாடுகளில் 14ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

## இயேசுவின் உடலை கல்லறையில் அடக்கம் செய்தார்கள்

யோசேப்பு மெல்லிய துணி ஒன்றை வாங்கி வந்து, இயேசுவின் உடலை இறக்கித் துணியால் சுற்றிப் பாறையில் வெட்டப்பட்டிருந்த கல்லறையில் கொண்டு வைத்தார்; அதன் வாயிலில் ஒரு கல்லை உருட்டி வைத்தார். (மாற்.15:46)

ஏன் இறந்த இயேசு உடனே விண்ணகம் செல்லவில்லை? ஏன் அடக்கம் செய்யப்பட்டார்?

நாங்கள் இறந்து, அடக்கம்செய்யப்பட்டாலும், நம் அனைவருக்கும் உயிர்ப்பு உண்டு, நிலைவாழ்வு உண்டு என்பபதை உறுதிப்படுத்தவே, இயேசு அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்கிறார் தூய பவுல்.

இப்போதோ, இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்ததுபோல ஒரு மனிதர் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர். ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானது போலக் கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர். (1கொரி.15:20-22)

இயேசுவின் இத்தனை பாடுகள், சிலுவைமரணம், உயிர்ப்பு எல்லாம் எதற்காக?

எல்லாம் நமக்காக.

எங்கள் அனைவரையும் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்து, இறை அரசாகிய நிலை வாழ்வில் வாழவைக்கவே. அதுவே தந்தையாகிய கடவுளின் திருவுளம். அதை நிறைவேற்றவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இதை இயேசுவே வெளிப்படுத்தியுள்ளார்.

என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன். ”அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம். மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்” என்று கூறினார். (யோவா.6:38-40)

அனைவருக்கும் உயிர்ப்பு உண்டு, நிலைவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையுடன், இயேசுவின் அன்பு வழியில், நாம் வாழ்கிறோமா?

இயேசுவின் அன்பையும் இரக்கத்தையும் அறியாதவர்களாக, அனைவருக்கும் உயிர்ப்பு உண்டு, நிலைவாழ்வு உண்டு என்பதில் நம்பிக்கையற்றவர்களாக, வாழ்ந்து, இறந்து, அடக்கம்செய்யப்பட்ட ஆன்மாக்களுக்காகவும் இறைவனின் இரக்கத்தை வேண்டி மன்றாடுவோம்.

நித்திய பிதாவே! எங்கள் ஆண்டவரும் உமது நேசமகனுமான இயேசுகிறிஸ்துவின் உடலையும், உதிரத்தையும், ஆன்மாவையும், தெய்வீகத்தையும் எங்கள் பாவங்களுக்கும், அகில உலகின் பாவங்களுக்கும் பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

இயேசுவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக - எங்கள் மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

இரக்கமுள்ள இயேசுவின் திரு இரத்தம் ஆன்மாக்களின் வேதனையைத் தணிப்பதாக.-

எங்கள் பேரில் தயவாயிரும் - - - - மரித்த விசுவாசிகள் உமது இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக.

# கிறிஸ்துவின் பாடுகளில் 15ம் நிலை

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து ----

## இயேசு உயிர்த்தெழுந்தார்.

வானதூதர் அப்பெண்களைப் பார்த்து “நீங்கள் அஞ்சாதீர்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத்தெரியும். அவர் இங்கே இல்லை அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார்.” (மத்.28:5-6)

உயிர்த்த இயேசு நாற்பதாம் நாள் விண்ணேற்றம் அடைந்தார். விண்ணகம் செல்லமுன். இயேசு சீமோன் பேதுருவிடம்,

“யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?” என்று கேட்டார். (யோவா.21:15)

மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், ”யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?” என்று கேட்டார்.

சீமோன் பேதுருவிடம் கேட்ட அதே கேள்வியை இன்று இயேசு எங்களிடமும் கேட்கிறார். நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா? உனக்கு என்னிடம் அன்பு உண்டா?

நமக்காகத் தம் உயிரைக் கொடுத்து அன்பை வெளிப்படுத்திய இயேசு கேட்கிறார். நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?

இயேசு கூறினார்; “என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்.” (யோவா.14:23)

தாய் மரியா “நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்று கூறி, கடவுளின் சொற்படி நடந்து கடவுளை அன்பு செய்தார். அதனால் தாய் மரியாவோடு கடவுள் இருந்தார். அருள் நிறையப்பெற்றார்.

எங்களோடும் கடவுள் இருக்கவேண்டும். கடவுளின் அருளும், ஆசீரும் நிறையப்பெறவேண்டும் என்றால், நாமும் தாய் மரியாவைப்போல், கடவுளின் சொற்படி நடந்து, கடவுளை அன்பு செய்யவேண்டும்.

“அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” என்று தாய் மரியாவை வாழ்த்தியதுபோல், எங்களையும் கடவுள் வாழ்த்தவேண்டும் என்ற எங்கள் ஆசையை, விருப்பத்தை, நாம் கடவுள்மீது வைத்துள்ள அன்பை வெளிப்படுத்தவேண்டும்.

அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்ற வார்த்தையும், பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்: உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என்ற வார்த்தையும், இறைவார்த்தைகள்.

இவ்இறைவார்த்தைகளையும், இயேசு சொல்லிக் கொடுத்த விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே என்ற செபத்தையும் சொல்லிக்கொண்டே, நம் தந்தையாகிய கடவுளின் அன்பை, நம் பாவங்களுக்காக தன்னையே பலியாக்கிய, இயேசுவின் தியாகம் நிறைந்த அன்பை, கடவுளின் இறை அரசுத் திட்டத்தை, நினைவுகூர்ந்து, தியானித்துச் சொல்லும் மன்றாட்டு மாலையே செபமாலை.

ஒருவர் ஒருவர்மீது வைத்துள்ள அன்பை வெளிப்படுத்த றோசஸ் கொடுப்பார்கள். மலர்மாலை சூடுவார்கள். அதேபோல் நாம் கடவுள்மீது வைத்துள்ள அன்பை வெளிப்படுத்த (றோசறி) செபமாலை சொல்வோம்.

ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. (லூக் 1:47)

அருள் நிறைந்த மரியே வாழ்க ஆண்டவர் உம்முடனே.
பெண்களுள் ஆசிபெற்றவர் நீரே. உம்முடைய திருவயிற்றின்
கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற
எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும்
வேண்டிக்கொள்ளும் ஆமேன்.

## சுருக்கக் குறியீடு

| | | |
|---|---|---|
| லேவி | - | லேவியர் |
| இச | - | இணைச்சட்டம் |
| திபா | - | திருப்பாடல் |
| எசா | - | எசாயா |
| மத் | - | மத்தேயு நற்செய்தி |
| மாற் | - | மாற்கு நற்செய்தி |
| லூக் | - | லூக்கா நற்செய்தி |
| யோவா | - | யோவான் நற்செய்தி |
| உரோ | - | உரோமையருக்கு எழுதிய திருமுகம் |
| 1கொரி | - | கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகம் |
| 2கொரி | - | கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம் |
| கலா | - | கலாத்தியருக்கு எழுதிய திருமுகம் |
| எபே | - | எபேசியருக்கு எழுதிய திருமுகம் |
| கொலோ | - | கொலோசியருக்கு எழுதிய திருமுகம் |
| 1தெச | - | தெசலோனியருக்கு எழுதிய முதல் திருமுகம் |
| எபி | - | எபிரேயருக்கு எழுதிய திருமுகம் |
| யாக் | - | யாக்கோபு எழுதிய திருமுகம் |
| 1யோவா | - | யோவான் முதல் திருமுகம் |

## சிலுவை பற்றிய செய்தி

### சிலுவை தியாகம் நிறைந்த அன்பின் அடையாளம்.

சிலுவை என்ற சொல்லை தியாகம் நிறைந்த அன்பு - அன்புச் சுமை, என்ற சொல்லால் வாசித்தால்

(சிலுவை பற்றிய செய்தி) தியாகம் நிறைந்த அன்பு பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை. (1கொரி.1:18)

இயேசு மக்கள் கூட்டத்தையும் சீடரையும் தம்மிடம் வரவழைத்து, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, (தம் சிலுவையைத்) தம் அன்புச் சுமையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” என்றார். (மாற்கு 8:34)

(தம் சிலுவையைச்) தம் தியாகம் நிறைந்த அன்புச் சுமையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது. (லூக்.14:27)

சிலுவைபற்றி தூய பவுல்

நானோ நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் (சிலுவையை அன்றி) தியாகம் நிறைந்த அன்பை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன். (கலா.6:14)

மனித ஞானத்தின் அடிப்படையிலான சொற்களில் இந்நற்செய்தியை அறிவித்தலாகாது. அவ்வாறு அறிவித்தால் (கிறிஸ்துவின் சிலுவை) கிறிஸ்துவின் தியாகம் நிறைந்த அன்பு பொருளற்றுப் போய்விடும். (1கொரி.1:17)

நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிப் பறைசாற்றுகிறோம். (அச்சிலுவை) அத்தியாகம் நிறைந்த அன்பு யூதருக்குத் தடைகல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாயும் இருக்கிறது. (1கொரி.1:23)

தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார். (சிலுவையின் வழியாக) தியாகம் நிறைந்த அன்பின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார். (எபே.2:16)

கிறிஸ்துவின் (சிலுவைக்குப் பகைவர்களாய்) தியாகம் நிறைந்த அன்புக்குப் பகைவர்களாய் நடப்போர் பலர் உள்ளனர்.. (பிலி.3:18)

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றோம். அது ஏனென்றால் உமது (சிலுவையினால்) தியாகம் நிறைந்த அன்பினால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

# இயேசு கேட்கிறார்

ஒரு மணி நேரம்கூட
என்னோடு விழித்திருக்க
உங்களுக்கு வலுவில்லையா?

உங்கள் மனம் ஆர்வமுடையதுதான்;
ஆனால் உடல் வலுவற்றது. எனவே
சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து
இறைவனிடம் வேண்டுங்கள். (மத்.26:40-41)

இயேசு கூறியதுபோல், ஒரு மணி நேரம்
தந்தையாகிய இறைவனிடம் வேண்டுவோம்.
எமக்காக சிலுவையில் அறையுண்ட
இயேசுவை உற்றுநோக்குவோம்.

இயேசுவிற்கு ஏன் இந்தப்பாடுகள்?
ஏன் இந்தச் சிலுவை மரணம்?
நம்மை நாமே கேட்போம். சிந்திப்போம்.

நாம் செய்த தவறுகளையும்,
செய்யத் தவறிய கடமைகளையும்,
இறை வார்த்தைகள் ஊடாக,
ஒரு மணி நேரம்,
பதினைந்து நிலைகளில்
சிந்தித்துத் தியானிப்போம்.

சிலுவைப்பாதை ஒரு தியானம்.
பதினைந்து நிலைகளையும்
சுற்றிவந்து சொல்லவேண்டியதில்லை.
சிலுவைப்பாதை ஆலயத்திலும், வீட்டிலும், எந்நாளும்,
சிந்தித்துத், தியானித்துச் செய்யும் சிலுவைத் தியானம்